செ.வெ.எண் : 60/ மார்ச் நாள் : 26.03.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

**கலைபண்பாட்டுத் துறை சார்பாக பாரம்பரிய கலைநிகழ்ச்சிகள் மூலம் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

இராமநாதபுரம் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் இன்று (26.03.2021) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கலை மற்றும் பண்பாட்டுத் துறை சார்பாக ஜவகர் சிறுவர் மன்றத்தை சார்ந்த சிறார்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021ஐ முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, "கொரோனா பாதுகாப்பு முன்னெச்சரிக்கையுடன் தேர்தல் நடவடிக்கைகளில் பங்கேற்றல், முதன்முறை வாக்காளர்கள், மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைத்து தரப்பு வாக்காளர்களையும் தேர்தல் நடவடிக்கைகளில் ஊக்குவித்தல், 100 சதவித வாக்குப்பதிவு, நேர்மையாக வாக்களித்தல்" உள்ளிட்ட நோக்கங்களை வலியுறுத்தி வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி, இராமநாதபுரம் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் கலை மற்றும் பண்பாட்டுத் துறை சார்பாக வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் இராமநாதபுரம் ஜவகர் சிறுவர் மன்றத்தை சார்ந்த சிறார்கள் ஏராளமானோர் ஆர்வமுடன் பங்கேற்று சிலம்பாட்டம், பொய்கால் குதிரை ஆட்டம், ஒயிலாட்டம், கட்டைக்கால் ஆட்டம் போன்ற பாரம்பரிய கலைகள் மூலமாகவும், வாக்களிப்பதன் அவசியம் குறித்த எளிய நாட்டுப்புற பாடல்கள் மூலமும் 100 சதவித வாக்குப்பதிவை வலியுறுத்தி வாக்காளர் விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டனர். மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமையேற்று ஆர்வமுடன் பங்கேற்ற சிறார்களுக்கு பாராட்டுகளை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/சார் ஆட்சியர் டாக்டர்.என்.ஒ.சுகபுத்ரா,இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.எஸ்.ஜெகவீரபாண்டியன், கலைபண்பாட்டுத் துறை உதவி இயக்குநர் திரு.டி.செந்தில்குமார், இராமநாதபுரம் வட்டாட்சியர் திரு.ரவிச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**